3. சிறப்புக் கவன ஈர்ப்பு

சென்னை கலாஷேத்ரா பவுண்டேஷன் மாணவிகள் விவகாரம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சென்னை கலாஷேத்ரா பவுண்டேஷன் மாணவிகள் எழுப்பியுள்ள புகார் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. S.S. பாலாஜி, திரு. தி. வேல்முருகன், திரு. கு. செல்வபெருந்தகை, திரு. JMH. அசன் மௌலானா, திரு. இரா. அருள், திரு. ட்டி. இராமச்சந்திரன், திரு. K. மாரிமுத்து ஆகியோர் கவன ஈர்ப்பு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இதை சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அரசின் கவனத்தை ஈர்க்கலாம். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.*

திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலாஷேத்ரா பவுண்டேஷனில் இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறுவது புதிது அல்ல; அந்த நிறுவனத்தில் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் செயல்படுகின்ற பல்வேறு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடத்தில் அரசின் கவனத்தை ஈர்த்து அமருங்கள்.*

திரு. S.S. பாலாஜி: *ஒன்றிய அரசின் நிறுவனங்களில் இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதுபோன்ற சம்பவங்கள் அங்கு நடைபெறுகின்றபோது, காவல் துறைகூட சற்று மென்மையான போக்கை கையாளுவதாகத் தெரிகிறது. நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள், இதே அவையில், "நியாயங்கள் எந்தக் காலத்திலும், எக்காரணத்தைக் கொண்டும் காயப்படுத்தப்படக் கூடாது; காயங்கள் எக்காரணத்தைக் கொண்டும், எந்தக் காலத்திலும், நியாயப்படுத்தப்படக் கூடாது" என்று பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுடைய வாக்கியத்தைப் பதிவு செய்திருக்கின்றார்கள். அந்த வகையில், அங்கே பாதிக்கப்பட்ட மாணவிகளுக்கு உரிய நியாயம் கிடைப்பதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றன், நன்றி.*

[2023 மார்ச் 31

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் இயங்கி வருகின்ற கலாஷேத்ரா கலைக் கல்லூரியில் பெண் பிள்ளைகள், குறிப்பாக கல்லூரி மாணவிகள் அங்கேயிருக்கின்ற பேராசிரியர் ஒருவரால் பாலியல் தொல்லைக்கு தொடர்ச்சியாக உட்படுத்தப்பட்டு வருவதாகவும், தொடர்ச்சியாக அவர் பெண்களை பாலியல்ரீதியாக துன்புறுத்துவதாகவும், அந்த மாணவிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து போராடி வருகிறார்கள். இதற்காக நியமிக்கப்பட்ட கல்லூரிக் குழு, விசாரணையை தற்போது நிறுத்திக் கொண்டது. காவல் நிலையத்தில் கொடுத்த புகாரையும் அந்த நிறுவனம் திரும்பப் பெற்றுக்கொண்டது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், காவல் துறையும் இதை விசாரித்து, பாலியல்ரீதியாக துன்புறுத்தப்பட்ட அந்த மாணவச் செல்வங்களுக்கு நீதி கிடைக்க வழிவகை காண வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1936 ஆம் வருடம் ருக்மணிதேவி அருண்டேல், ஜார்ஜ் அருண்டேல் ஆகியோரால் ஏற்படுத்தப்பட்ட கலாஷேத்ரா என்ற புகழ் பெற்ற நிறுவனம், தற்போது ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. அன்னிபெசன்ட் அம்மையார் அவர்கள், அந்த நிறுவனத்தை வரலாற்றுச் சிறப்புமிக்க இடமாக வளர்த்தார்கள். தற்போது, தேசியத்திற்காக, தமிழ்நாடு வளர்வதற்காக பாடுபட்டுக் கொண்டிருக்கக்கூடிய தலைவர்களெல்லாம் அந்தப் பகுதியில் நடைப் பயிற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அது அப்படியொரு புகழ் பெற்ற இடம். அங்கு பாலியல் வன்கொடுமை நடந்து கொண்டிருக்கிறது என்று மாணவ, மாணவிகள் கடந்த 10 ஆண்டுகளாகப் புகார் அளித்து வருகிறார்கள். காவல் துறை கண்டுகொள்ளவில்லை. இப்போது சில மாணவ, மாணவிகள் புரட்சிகரமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் புகார் கொடுத்துள்ளதாக தகவல் வந்திருக்கிறது. தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவர் ரேகா சர்மா என்பவர், விசாரணை நடத்தி, அதை மூடிவிட்டார் என்ற தகவலும் வந்திருக்கிறது.

2023 மார்ச் 31] [திரு. கு. செல்வபெருந்தகை]

முற்பகல் 11—40

தமிழ்நாடு மகளிர் ஆணையத்திற்குக் கொடுத்த புகாரை திரும்பப் பெற வேண்டும், காவல் துறைக்குக் கொடுத்த புகாரை திரும்பப் பெற வேண்டும் என்று மிரட்டல்கள் வருகின்றன என்று நேற்று இரவு மாணவ, மாணவிகள் என்னைச் சந்தித்தார்கள். நான் அவர்களிடம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நீங்களும் கொண்டு செல்லுங்கள், நானும் கொண்டு செல்கிறேன், உங்களுக்கு கண்டிப்பாக இதில் நீதி கிடைக்கும் என்று சொன்னேன். ஆனால், முதன்முதலில் கலைஞர் தொலைக்காட்சி மட்டும்தான் இந்தச் செய்தியை அறிவித்திருக்கிறது. அந்தப் பெயரை மட்டும் கவனியுங்கள். இந்த பாலியல் வன்கொடுமையில் இறைவன் பெயரை வைத்துக் கொண்டிருக்கின்ற அந்த கயவாளிகள் பெயரை நான் படிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) உதவி பேராசிரியர் ஹரி பத்மன். ஹரி என்ற பெயர் உள்ளவர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. நீங்கள். . .*

திரு. கு. செல்வபெருந்தகை: *நடனப் பயிற்சியாளர் சஞ்சித் (குறுக்கீடு) என்ன இது? நாட்டு மக்கள் எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது எவ்வளவு பெரிய* serious *ஆன விஷயம். நம்முடைய குழந்தைகள்தான் அங்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *செய்தியில் வந்திருக்கிறது என்று சொல்லுங்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *ஒரு நிமிடம் கொடுங்கள். உதவி பேராசிரியர் ஹரி பத்மநாபன். ஹரி பெயரை தாங்கியிருக்கின்ற பத்மன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, பெயரைச் சொல்ல வேண்டாம்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *அடுத்து நடனப் பயிற்சியாளர் சஞ்சித் லால், சாய் கிருஷ்ணன், ஸ்ரீநாத் ஆகியோர் பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்டிருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாணவ, மாணவிகளிடமிருந்து உங்களுக்குப் புகார் வந்திருக்கிறது.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு மாணவிகளெல்லாம் இதனைக் கொண்டு சென்றிருக்கிறார்கள் என்கின்ற தகவல் வந்திருக்கிறது. கலைஞர் தொலைக்காட்சிதான் முதன்முதலில் இந்தச் செய்தியை வெளியில் கொண்டு வந்திருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும், போதும்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *ஆகவே, இதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இரும்புக்கரம் கொண்டு இப்படிப்பட்ட காம வெறியர்களை அடக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோள் வைக்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள். (குறுக்கீடு) கட்சிக்கு ஒருவர். (குறுக்கீடு) முடிந்துவிட்டது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள். (குறுக்கீடு) உங்கள் பெயரை பதிவு செய்தாகிவிட்டது, உட்காருங்கள்.*

***திரு. இரா. அருள்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைமகள் குடியிருக்கின்ற புனிதமான இடம், கலாஷேத்ரா கலைக் கல்லூரி. அங்கே நீண்ட நெடுங்காலமாக தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்தப் பாலியல் வன்முறைகளுக்கு கடும் கண்டனத்தை எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக தெரிவித்துக்கொள்வதோடு, இதற்கு மிகக் கடுமையான நடவடிக்கையை தமிழ்நாடு அரசு எடுக்க வேண்டுமென்று அவையின் கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, திருவான்மியூரில் ஒன்றிய அரசின் நிதி பங்களிப்புடன் செயல்படுகின்ற கலாஷேத்ரா கலைக் கல்லூரியில் தொடர்ந்து பேராசிரியர்கள் மாணவிகளுக்கு பாலியல் தொல்லை தருவதாக நிர்வாகத்திடம் புகார் கொடுத்தும், எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காத நிலையில், சமூக வலைதளங்களிலே இந்தப் பிரச்சினை வந்த பிறகு அதற்கான எந்த நடவடிக்கையையும்*

2023 மார்ச் 31] [திரு. ட்டி. இராமச்சந்திரன்]

கல்லூரி நிருவாகம் எடுக்கவில்லை. எனவே, சம்பந்தப்பட்ட பேராசிரியர்கள்மீது தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலாஷேத்ரா பவுண்டேஷன் விவகாரம் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. S.S. பாலாஜி, திரு. தி. வேல்முருகன், திரு. கு. செல்வபெருந்தகை, திரு. இரா. அருள், திரு. ட்டி. இராமச்சந்திரன் ஆகியோர் அவையினுடைய கவனத்தை ஈர்க்கக்கூடிய வகையிலே, இங்கே உரையாற்றியிருக்கிறார்கள். அதற்குரிய விளக்கத்தை உங்கள் அனுமதியோடு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.*

ஒன்றிய அரசினுடைய கலாச்சாரத் துறையின்கீழ் இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய, கலாஷேத்ரா பவுண்டேஷன் விவகாரத்தைப் பொறுத்தவரைக்கும், தேசிய மகளிர் ஆணையம், முதலில் தானாக முன்வந்து "பாலியல் தொல்லை" என டுவிட்டர் செய்தி போட்டு, 21–3–2023 அன்று நடவடிக்கை எடுக்கக் கோரி டி.ஜி.பி.–க்குக் கடிதம் எழுதியது. இது தொடர்பாக, கலாஷேத்ரா பவுண்டேஷன் இயக்குநர், நமது மாநில காவல் துறைத் தலைவரைச் சந்தித்து, தங்களது நிறுவனத்தில் பாலியல் புகார் ஏதும் இல்லை என்று தெரிவித்தார். பிறகு, தேசிய மகளிர் ஆணையமே "நாங்கள் டைம்ஸ் ஆப் இந்தியா செய்தி அடிப்படையில் அவ்வாறு விசாரித்தோம்; அந்த விசாரணையை முடித்து வைத்துவிட்டோம்" என 25–3–2023 அன்று டி.ஜி.பி.–க்குக் கடிதம் எழுதி தெரிவித்திருக்கிறார்கள்.

பின்னர், கடந்த 29–3–2023 அன்று மீண்டும் தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவரே வந்து கலாஷேத்ராவில் இருக்கக்கூடிய 210 மாணவிகளிடம் விசாரித்து விட்டுச் சென்றுள்ளார். அப்போது, காவல் துறை தங்களுடன் வரத் தேவையில்லை என்றும் கூறியிருக்கிறார். இந்த விவகாரத்தில் காவல் துறைக்கு இதுவரை எழுத்துப்பூர்வமான புகார் ஏதும் கிடைக்கப் பெறவில்லை. இந்த நிலையில், மாணவிகள் நடத்திய உள்ளிருப்புப் போராட்டத்தின் விளைவாக, கலாஷேத்ரா பவுண்டேஷனில் உள்ள கல்லூரிக்கு விடுமுறை அளிக்கப்பட்டு, விடுதிகளை விட்டு மாணவிகள் வெளியேற வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள்.

இந்த விவகாரம் எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டவுடன், மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்பு கொண்டு, விவரங்களை அறிந்தேன். இந்த விஷயத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பாக மேலும் விவரங்களை அறிவதற்காக, வருவாய்க் கோட்ட அலுவலர், வட்டாட்சியர், காவல் இணை ஆணையர், துணை ஆணையர் மற்றும் அலுவலர்கள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டு, அங்கு விசாரணை மேற்கொண்டார்கள்.

முற்பகல் 11–45

இன்று காலையில், மீண்டும் வருவாய்த் துறை மற்றும் காவல் துறை உயர் அலுவலர்கள் அடங்கிய குழுவினர் அங்கு சென்று, மாணவிகள் மற்றும் நிருவாகத்தினருடன் பேசி வருகிறார்கள். மேலும், அங்குள்ள மாணவிகளின் பாதுகாப்பிற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு, அங்கு ஒரு பெண் ஆய்வாளர் தலைமையில் காவலர்கள் பாதுகாப்பிற்கு நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

அரசைப் பொறுத்தவரை, இந்த விவகாரத்தில் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு, குற்றச்சாட்டு உறுதியானால், தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள்மீது உரிய சட்டரீதியான நடவடிக்கை கட்டாயம் எடுக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என தங்கள் மூலமாகத் தெரிவித்து, அமைகிறேன். (குறுக்கீடு)

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஆ) திருப்பரங்குன்றம் தொகுதி, திருமுருகன் கோயில் மற்றும் பள்ளிக்கு அருகிலுள்ள மதுபானக் கடைகளை இடமாற்றம் செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா, என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: *மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆற்றல்மிகு கழகப் பொதுச் செயலாளர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*